## மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 15.04.2015

### மாநிலத்தின் கடந்த வார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 39°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 22°செஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செஆகவும் பதிவானது. இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 29°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் கன மழை காணப்பட்டது.

### வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (14.04.2015 முதல் 18.04.2015)

#### 1. மேற்கு மண்டலம்

மேற்கு மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில், வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமானது முதல் கனமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35°செ முதல் 36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 72 முதல் 74 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50 முதல் 52 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 3 கி.மீ முதல் 5 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ கோடை மழையை சேமிக்கும் வகையில் சரிவுக்கு குறுக்காக கோடை உழவு செய்யவும்.
- ✓ மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் எல்லா இறவை பயிர்களுக்கும் குறிப்பாக தாழ்வான பகுதிகளில் தக்க வடிகால் வசதி செய்யவும்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் இறவை கம்பு விதைப்பை மேற்கொள்ளலாம். மேலும் விதைகளை 2 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு கரைசல் கொண்டு கடினப்படுத்தி (விதைகளை 16 மணி நேரம் ஊரவைத்து, 5 மணி நேரம் நிழலில் உலர்த்தவும்) விதைக்கவும்.
- ✓ கோடை காலங்களில் பெறப்படும் மழையுடன் இடியும் மின்னலும் சேர்ந்து வரக்கூடும். எனவே கால் நடைகளை மழை நேரங்களில் மேய்ச்சலுக்கு விடவேண்டாம்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் கால்நடை மற்றும் கோழி கூடாரங்களின் அருகில் தண்ணீர் தேங்காமல் வடிகால் வசதி செய்வதன் மூலம் கொசு இனப்பெருக்கத்தை தடுக்கலாம் மற்றும் கால்நடைகளுக்கு கொசுக்களால் ஏற்படும் நோய்களையும் தடுக்கலாம்.

#### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை $33^0$செ முதல் $38^0$செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செ முதல் 26°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 30 முதல் 80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 5 கி.மீ முதல் 11 கி.மீ ஆகவும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ கோடை பருவத்தில் இறவையில் உளுந்து பயிருக்கு ஆடுதுறை 5 ஏற்ற இரகம்.
- ✓ கருபம்பு பயிரில் இரும்புசத்து பற்றாக்குறையால் மஞ்சளாக மாறும் போது ஒரு எக்டருக்கு அன்னபேதி உப்பினை 2.5 என்ற அளவில் கட்டைவிட்ட 15 ம் நாள் தெளித்தல் பயிர் மீண்டும் மஞ்சளாக இருந்தால் 15 நாள் இடைவெளியில் திரும்பவும் தெளிக்க வேண்டும். கடைசி தெளிப்புடன் ஒரு எக்டருக்கு 2.5 கிலோ யூரியாவையும் சேர்த்துக்கொள்ளவும்.
- ✓ எள் விதைத்த 15 ஆம் நாள் மற்றும் 25 ஆம் நாள் பயிர்களை களைக்க வேண்டும். எள் விதைத்த 25 ஆம் நாள் ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும்.
- ✓ நெல் தரிசுப் பருத்திக்கு 45-ம் நாள் ஒரு களை எடுத்துவிட்டு 3 நாட்கள் கழித்து உரமிட்டு மண் அணைத்து நீர் பாய்ச்சவும்.
- ✓ இறவையில் விதைக்கப்பட்ட எள்பயிருக்கு வடிகால் வசதி செய்து கொடுக்கவும்.
- ✓ மாடுகளுக்கும் ஆடுகளுக்கும் குடற்புழு நீக்க எடைக்கு தகுந்தவாறு மாத்திரை கொடுக்கவும்.

**3. தெற்கு மண்டலம்**

தெற்கு மண்டலத்திற்க்கு உட்பட்ட மாவட்டங்களான, திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் பெரும்பாலான மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. திருநெல்வேலி மற்றும் விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை $23^0$செ முதல் $25^0$செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 42 முதல் 90 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் திருநெல்வேலி மாவட்டத்தில் 4 கி.மீ முதல் 5 கி.மீ ஆகவும், மற்ற மாவட்டங்களில் 10 கி.மீ முதல் 19 கி.மீ வேகத்திலும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் பருத்தி அறுவடைக்குப்பிறகு பயிர்க்கழிவுகளை சுழல்வெட்டியை (rotoslasher) பயன்படுத்தி மண்ணோடு சேர்க்கவும். இவ்வாறு செய்வது மண்வளத்தை மேம்படுத்தவும் மண்ணின் ஈரத்தை பாதுகாக்கவும் உதவும்.
- ✓ கத்தரிக்கு மகசூலை மேம்படுத்த ஒரு லிட்டருக்கு வளர்ச்சி ஊக்கியான டிரையாகான்டனால் 2 பி.பி.எம்.+ சோடியம் போரேட் அல்லது போராக்ஸ் 35 மி.கி என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் பெரும்பாலான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 19°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 9°செ முதல் 10°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 84 முதல் 92 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. மாலைநேர காற்றின் ஈரப்பதம் 76 முதல் 80 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது.

அமைதியான காற்று மணிக்கு 2 கி.மீ முதல் 3 கி.மீ அளவில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மிதமான மழையின் காரணமாக, கார்னேஷனில் வாடல்நோய் தென்பட்டால் இதை கட்டுப்படுத்த இப்ரோடியோன் 25 % + கார்பென்டசிம் 25 % கலந்து தெளிக்கலாம்.
- ✓ காற்றின் ஈரப்பதம் அதிகமாக காணப்படுவதால், பயிர்களில் ஏற்படும் சாம்பல் நோயை கட்டுப்பபடுத்த ஒரு லிட்டர் நீருக்கு நனையும் கந்தகம் 2கிராம் என்ற அளவில்15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும்.
- ✓ மழை எதிர்பார்க்கபடுவதால் மண்அரிப்பை தடுக்க சரிவுக்கு குறுக்கே 1 மீ இடைவெளியில் வாய்க்காலோ அல்லது வரப்போ போட வேண்டும்.

**5.வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்க்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 35°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல் 24°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 72 முதல் 74 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகமானது 5 கி.மீ முதல் 8 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ கோடை மழை ஆங்காங்கே பெய்திருக்கும் வேளையில் பகல் வெப்பமும் சற்றே குறைந்த அளவில் நிலவும் என்பதால் கோழிகளிடையே வெப்ப அயற்சி சற்றே குறைந்துள்ளது. இதே வானிலை வரும் நாட்களிலும் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது, ஆயினும் தீவனத்திலும் தண்ணீர் மற்றும் கோழிகளின் மேலாண்மையிலும் தொடர்ந்து கவனம் செலுத்தியும் நோய் எதிர்ப்புத் தன்மையை அதிகரிக்கும் வழிகளான வைட்டமின்களின் பயன்பாட்டினை அதிகரித்தும் (வைட்டமின் சி மற்றும் வைட்டமின் ஈ) வர வேண்டும்.
- ✓ தற்போது கிடைக்கும் கோடை மழையினைப் பயன்படுத்தி மானாவரி நிலங்களில் கோடை உழவு செய்யவும்.
- ✓ மழையும் காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் தார் தள்ளிய வாழைகளுக்கு முட்டு கொடுக்கவும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலை 33°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 27 °செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் வேலூர், மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் 40 முதல் 90 சதவிகிதமாகவும், மற்ற மாவட்டங்களில்

64 முதல் 82 சதவிகிதமாகவும் காற்றின் வேகம் 6 கி.மீ முதல் 20 கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ உழவர்கள் கறவை மாடுகளின் வெப்பத்தைக் குறைக்க வெயில் அதிகமாக இருக்கும் நேரத்தில் இரண்டு அல்லது மூன்று முறை தண்ணீர் தெளித்து உடல் வெப்பத்தினை தணிக்க வேண்டும்.
- ✓ உழவர்கள் தங்களுடைய கோழிப்பண்ணைகளில் வெயில் அதிகமாக இருப்பதால் பகல் நேரத்தில் தீவனம் அளிக்காமல் குளிர்ந்த குடி நீர் அளிப்பதன் மூலம் வெப்பதாக்கத்திலிருந்து கோழிகளை பாதுகாக்கலாம்.
- ✓ மழையும் காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் தார் தள்ளிய வாழைகளுக்கு முட்டு கொடுக்கவும்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை $32^0$செ முதல் $33^0$செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை $24^0$செ முதல் $25^0$செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 74 முதல் 78 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 9 கி.மீ முதல் 11 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அன்னாசியில் சீரான பூ மற்றும் காய்ப்பிற்கு 2 சதம் யூரியா + 0.04 சதம் சோடியம் கார்பனேட் + 20 பி.பி.எம் எத்திபோன் கலவையைச் செடியின் கொண்டைப் பகுதியில் ஊற்றவும்.
- ✓ மழையும் காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் தார் தள்ளிய வாழைகளுக்கு முட்டு கொடுக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**

**த.நா.வே.ப.கழகம், கோவை.**